**மத்திய மாகாண அரச சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2023**

மத்திய மாகாண அரச சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவை வகுப்பு 2 தரம் II இல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக, கீழ் தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியிலுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பொதுத் தகைமைகள்** :

1.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

1.2 சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.3 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.4 பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு குறித்துரைக்கப்பட்ட சகல தகைமைகளும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.5 தண்டனைக் கோவைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

1.6 அரச சேவையின் அல்லது மாகாண அரச சேவையின் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

02. **கல்வித் தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரர்களும் இங்கு குறிப்பிட்டுள்ள அனைத்து தகைமைகளையும் **2023.02.20** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(அ) கல்வித் தகைமைகள்** :

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

அல்லது

(2) I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பிரதான பாடம் ஒன்றாக கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்துடனான பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும். (இங்கு குறைந்தது பட்டத்தின் 1/3 பங்கானது கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தினை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்)

அத்துடன்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பத்தில் பட்டப்பின் டிப்ளோமா ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

(3) I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்றிலிருந்து அல்லது உயர் கல்வி விடயப் பொறுப்பு அமைச்சினால் பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உயர் கல்வி நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணனி விஞ்ஞானம்/ தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலைப் பட்டம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்

அல்லது

(4) I. மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழிநுட்பம் தொடர்பான தேசிய தொழில் தேர்ச்சி மட்டம் (NVQ) 07 அல்லது அதனிலும் கூடிய NVQ சான்றிதழ் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

II. உரிய துறையில் இரண்டு (02) வருட தொழில்சார் அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்

03. **சம்பளம் :-**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம், மத்திய மாகாண அரச சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் சேவை வகுப்பு 2 தரம் II மற்றும் I இற்கு ஏற்புடையதான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் MN 06 – 2016 இற்கமைய ரூபா. 36,585 - 10 x 660 - 11 x 755 - 15 x 930 - ரூபா. 65,440 ஆகும். அத்துடன் இச்சம்பளமானது நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகமாக அரசினால் அரச அலுவலர்களுக்கு காலத்திற்கு காலம் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

04. ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்:-

இப்பதவிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்திற்கமைய மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

05. **ஆட்சேர்ப்பு முறை:-**

நிலவும் 100% ஆன வெற்றிடங்களும் மட்டுப்படுத்தப்பட்டதன் அடிப்படையில் நியமிக்கப்படும். மேலே பந்தி 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள, மத்திய மாகாண அரச சேவையில் நிரந்தர நியமனம் வகிக்கும் உத்தியோகத்தர்களின் முன்னைய சேவைக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் இப்போட்டிப் பரீட்சைக்கு உள்வாங்கப்படுவர். விண்ணப்பதாரர்களின் விருப்பின் படி ஒரு மொழி மூலத்தில் மாத்திரமே இப்பரீட்சைக்கு தோற்ற முடியும். சித்தியடைவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய நடாத்தப்படும் நேர்முகப்பரீட்சையில் உரிய தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு வரிசையின் அடிப்படையில் வெற்றிட பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்.

06. **சேவை நிபந்தனைகள் :-**

6.1 நியமனங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் திகதி என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். சில வெற்றிடங்கள் அல்லது சகல வெற்றிடங்களையும் நிரப்புதல் அல்லது நிரப்பாது விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் சார்ந்ததாகும்.

6.2 மத்திய மாகாண அரச சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், 2019.09.04 ஆம் திகதிய மத்தயி மாகாண கௌரவ. ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவைப் பிரமாணக் குறிப்பில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள் மற்றும் அச்சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள ஏதேனும் திருத்தங்களிற்கும், தாபனவிதிக்கோவை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்கள் ஆகியவற்றுக்கு உட்பட்டு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் மத்திய மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவை வகுப்பு 2 தரம் II இற்கு நியமிக்கப்படுவர்.

6.3 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும். மத்திய மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவை வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து 03 வருட காலத்திற்குள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்பச் சேவை வகுப்பு 2 தரம் I இற்கு பதவியுயர்வு செய்யப்பட்டு 05 வருடங்கள் கடந்து செல்வதற்கு முன்னதாக இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையிலும் சித்தியெய்துதல் வேண்டும்.

6.4 இந்நியமனமானது அரசகரும மொழிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏற்புகளுக்கு உட்பட்டதாகும்.

6.5 இணைப்பு மொழி : 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட அலுவலர்கள் நியமிக்கப்பட்டு 03 வருட காலத்திற்குள் க.பொ.த.(சா.த) பரீட்சையில் திறமைச் சித்தியொன்றைப் பெறுதல் வேண்டும்

07. **விண்ணப்பிக்கும் முறை:-**

7.1. அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600/- இனை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் பொருட்டு மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிறப் பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும். வேறு வருமானத் தலைப்பிற்கு பணமாக செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டு அல்லது மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டினை ஒட்டி அல்லது பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள் செலுத்தப்படமாட்டாது.

7.2. இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன், நிறுவனத் தலைவரின் மூலம் சான்றுபடுத்திய மத்திய மாகாண அரச சேவையில் தற்போது வகிக்கும் பதவிக்குரிய நியமனக் கடிதத்தின் பிரதி மற்றும் உரிய கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் என்பவற்றை இணைத்து “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு **2023.02.20** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2023” எனக் குறிப்பிடல் வேண்டும்.. குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

08. **பரீட்சை ஊடகம்**

சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான குறியீட்டினை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

09. **பரீட்சை நிலையம்**

இப்பரீட்சையான கண்டி நகரில் மாத்திரம் அல்லது விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் நிரந்தர வதிவிட மாவட்டத்தின் அடிப்படையில் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் நடாத்தப்படும். பரீட்சை நிலையங்கள் அமையும் இடம் பற்றி மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவினால் பரீட்சை அனுமதிப்பத்திரத்தின் மூலம் விண்ணப்பதாரிகளுக்கு அறிவிக்கப்படும்.

10. **எழுத்துப் பரீட்சை மற்றும் பாடவிதானம்**

இப்பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக விண்ணப்பதாரிகள் பின்வரும் பரீட்சை செயற்றிட்டத்தின் கீழ் எழுத்து மூலப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

| வினாப்பத்திரத்தின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | பரீட்சார்த்தியினது தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப கோட்பாடுகள் தொடர்பான அறிவு, கணினி கட்டமைப்பு மற்றும் பணிசெயல் முறைமை, மென்பொருள், வன்பொருள் தொடர்பான அறிவு, e-அரசு (e - gov) எண்ணக்கருவை மிகவும் திறம்பட செயல்படுத்துவதற்கு தேவையான தகவல் மற்றும் தொடர்பாடல் அறிவு, தகவல் தொகுதிகளை பகுப்பாய்வு செய்தல், வடிவமைத்தல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்தல், மற்றும் பராமரித்தல் (System Analysis, Design, Testing, Implementation and Maintenance) தொடர்பான அறிவு, தரவுத்தளங்களை (Database) வடிவமைத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான அறிவு, வன்பொருள், தரவுத் தொடர்பாடலும் கணனி வலையமைப்புகளும், சர்வதேச வலைப்பின்னல், இணையத்தள வடிவமைப்பும் மற்றும் புதிய வலையமைப்பு சேவைகளும், மின்னஞ்சல், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பத் திட்டங்களது வாழ்க்கை வட்டம் போன்ற துறைகளில் காணப்படுகின்ற அறிவும், மேற்பார்வை செய்யும் ஆற்றலையும் பரீட்சித்துப் பார்க்கின்ற வினாக்களை உள்ளடக்கிய வினாத்தாளாகும். |
| 2. உளச்சார்பு | இவ்வினாப்பத்திரம் பரீட்சார்த்தியின் புள்ளிவிபர ஆற்றலினையும், தர்க்க ரீதியாக விடயங்களை முன்வைக்கும் அறிவினையும் பரீட்சித்தல் தொடர்பான வினாக்களைக் கொண்டிருக்கும். பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளிக்கும் வடிவிலான 50 வினாக்களைக் கொண்டிருப்பதோடு அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். |
| 3. பொது விவேகம் | புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக் கட்டமைப்புக்கள், உடன் தொடர்புகள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை, தர்க்கரீதியான அறிவு, பொருள்கோடல் திறமை, வேறு நிலைமைகளுக்கு உரித்தாக்கிக் கொள்ளத்தக்கதான ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்திக்குள்ள அறிவு மட்டத்தை அளவிடுதல், இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடை அளிக்கும் மாதிரியிலான வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அனைத்து வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும். |

11. **விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள்**

மாதிரி விண்ணப்பத்திற்கமைய **A**4 அளவு தாளின் இரு பக்கங்களையும் பாவித்து அதன் முதலாவது பக்கத்தில் இல. 01-03 வரையான விடயங்களையும், இரண்டாவது பக்கத்தில் இல. 04-06 வரையான விடயங்களையும், மிகுதி மூன்றாவது பக்கத்திலும் உள்ளடங்கியதாக விண்ணப்படிவங்கள் தயாரிக்கப்பட வேண்டும். விண்ணப்பத்தை தட்டச்சு செய்து அல்லது தெளிவான கையெழுத்தினால் நிரப்பப்பட வேண்டும்.

12. ஆட்சேர்ப்பு அறிவித்தலின் அடிப்டையில் நியமனம் வழங்க முன்னர், வழங்கிய பின்னர், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்து செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

13. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரினூடாக சமர்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் நியமனம் பெறும் பொருட்டு திணைக்களத் தலைவர் அவரை விடுவிக்க உடன்படுதல் வேண்டும்.

14. ஆபேட்சகரின் ஆளடையாளம்

இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளரின் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

(அ) தேசிய ஆள்அடையாள அட்டை

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

(இ) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

15. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

16. இதன் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

கை/இ: குமுதினி எஸ் பிரேமசந்திர,

செயலாளர்,

மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,

மத்திய மாகாணம்

2023 ஜனவரி மாதம் ... ஆம் திகதி

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,

இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,

கண்டி

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

(அலுவலக உபயோகத்திற்கு)

**மத்திய மாகாண அரச சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை – 2023**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :

சிங்களம் - 1

தமிழ் - 2

ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

01. விண்ணப்பதாரரின்

1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :..........................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

1.2 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ..........................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : ..........................................................................

.............................................................................................................................

02. சேவை நிலையமும் அதன் முகவரியும்

2.1 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : --
(ஆங்கிலக் கெப்பிற்றல் எழுத்தில்) ..........................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

2.2 அலுவலகத்தின்/ திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : -
(சிங்களத்தில்/ தமிழில்) ..........................................................................

.............................................................................................................................

.............................................................................................................................

2.3 பணிபுரியும் சேவை நிலையத்தின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் முகவரி (பிரவேச அட்டை அனுப்ப வேண்டியதற்கு):

.............................................................................................................................

03. 3.1 பால் (பெண் -1, ஆண் – 0) ☐ (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்

3.2 பிறந்த திகதி :- ஆண்டு: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி : ☐☐

3.3 தேசிய ஆளடையாள அட்டை இல: ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

3.4 தொலைப் பேசி இலக்கம்: - ☐☐☐☐☐☐☐☐☐☐

3.5 நிரந்தர வதிவிட மாவட்டம் :- ..........................................

04. சேவை விபரங்கள் :-

4.1 நீங்கள் தற்போது சேவையாற்றும் நிறுவனத்தின் பெயர் : ..................................................................................................................................................................................

4.2 அதற்குரிய திணைக்களம் அல்லது அமைச்சு: ..................................................................................................................................................................................

4.3 உமது ஆள்சார்புக் கோவை பேணப்பட்டு வரும் அலுவலகம் மற்றும் நிறுவனத் தலைவரை தெளிவாகக் குறிப்பிடவும் : ..........................................................................

4.4 தற்போது வகிக்கும் பதவிப் பெயர் : ..........................................................................

4.5 தற்போது வகிக்கும் பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி : ..........................................................

4.6 சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட திகதி : ..........................................................................

4.7 சம்பள அளவுத் திட்டம் (25.02.2016 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றிக்கைக்கமைய) : ..........................................................................................................

4.8 தற்போதைய பதவி ஓய்வூதியம் உரித்துடையதா? :- ....................................................................

4.9 2023.02.20 ஆந் திகதியில் தற்போதைய பதவியில் மொத்தச் சேவைக்காலம் : .............

05. கல்வித் தகைமைகள்

| பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர் | பெற்றுள்ள பட்டம் அல்லது சித்தியடைந்த பரீட்சை | பட்டம் அல்லது குறித்த பரீட்சையில் கற்ற பாடங்கள் | கால வரையறை | சித்தி | சான்றிதழ் திகதியும் இலக்கமும் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

பற்றுச்சீட்டை கழராதவாறு இங்கே ஒட்டவும்
(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்)

06. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் விபரம் :

6.1. பணம் செலுத்திய பிரதேச செயலகம்: ..........................................................................

6.2. பற்றுச்சீட்டின் இலக்கமும் திகதி : ..........................................................................

6.3. செலுத்திய தொகை : ..........................................................................

இதில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் சரியானவையென அத்தாட்சிப்படுத்துகின்றேன். இத்துடன் தரப்பட்டுள்ள விபரங்களில் எவையேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனக் காணப்பட்டால், அச்செம்மையின்மை நியமனம் செய்யப்படுவதற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் வேலை நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன் என்பதையும் அறிவேன். மேலும் பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிவேன் என்பதையும் வெளிப்படுத்துகின்றேன்

..................................................................

திகதி : ..........................

பரீட்சார்த்தியின் கையொப்பம்
(நிறுவனத் தலைவர் முன்னிலையில்)

குறிப்பு :- தமது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகாரம் பெற்ற அலுவலரொருவர் முன்னிலையில் விண்ணப்பதாரி தனது கையொப்பத்தினை இடுதல் வேண்டும்.

**<u>கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :</u>**

எனது அலுவலகத்தின் அலுவலரான திரு/ திருமதி/ செல்வி .......................................................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் .................................................................. ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

திகதி : ..................................................

பெயர் : ..................................................

பதவிப்பெயர் : ..................................................

முகவரி : ..................................................

**<u>திணைக்களத் தலைவரின் சான்றிதழ்</u>**

1. இவ்விண்ணப்பதாரரான திரு./ திருமதி/ செல்வி .......................................................................... இத்திணைக்களத்தில் பணியாற்றுபவரெனவும்,
2. அவர் 2023.02.20 ஆந் திகதிக்கு 01/2020 ஆம் இலக்க அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனை எதுவும் பெறவில்லை எனவும்,
3. இப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் நியமிக்கப்படுவதற்கு அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரின் தற்போதைய பதவியிலிருந்து அவரை விடுவிக்க முடியுமெனவும்,
4. பரீட்சைக் கட்டணமாக ரூபா 600/- இனை செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளார் எனவும்,

5. அவரது விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்கள் இந்நிறுவனத்திலுள்ள பதிவுகளுடன் செவ்வை பார்க்கப்பட்டுள்ளன எனவும் இப்பரீட்சை சம்பந்தமான அறிவிப்பில் காணப்படும் ஒழுங்குவிதிகளுக்கிணங்க இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவர் தகைமை உடையவர் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

(பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்)

.....................................................................................

திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி : ......................................................................

பெயர் : ......................................................................

பதவிப்பெயர் : ......................................................................

முகவரி : ......................................................................

குறிப்பு : -

1. இச்சான்றிதழில், திணைக்களத் தலைவர் அல்லது அவர் சார்பில் கையொப்பமிட முறையாக அதிகாரம் பெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே கையொப்பமிடுதல் வேண்டும். சான்றிதழ் அளிக்கும் உத்தியோகத்தர் சான்றிதழில் தரப்பட்டுள்ள விபரங்கள் எல்லா வகையிலும் சரியானவையெனத் திருப்தியடைதல் வேண்டும்.
2. எல்லா வகையிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்படலாகாது.